[1994 மே 3

4. விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை

அரசு ஊழியர்களுக்கும், ஒய்வூதியம் பெறுவோருக்கும் அகவிலைப் படி உயர்வு :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பேரவை விதி 110-ன் கீழ் பேரவைக்கு ஓர் அறிவிப்பினை அறிவிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அந்த அறிவிப்பினை இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவைக்கு வெளியிடுவார்கள்.

* மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் பதவி ஏற்ற நாளிலிருந்து, நிதிப் பற்றாக்குறையும் கடுமையான நிதிச் சுமையும், நிதி நெருக்கடியும் இருந்து வந்த போதிலும், அரசு அலுவலர்களின் நலனில் அக்கறை கொண்டு, எங்கள் அரசு செயல்பட்டு வருகிறது. எங்கள் கொள்கைப்படி, அரசு அலுவலர்கள் அனைவரும் பயன்பெறும் வண்ணம் 1—1—1994 முதல் மத்திய அரசு அலுவலர்களுக்கு இணையாக அகவிலைப்படி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்படி மாதம் 3,500 ரூபாய் வரை ஊதியம் பெறுபவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் அகவிலைப்படியை 97 சதவீதத்திலிருந்து 104 சதவீதமாக உயர்த்தியும் (மேசையைத் தட்டும் ஒலி) மாதம் 3,500 ரூபாய்க்கு மேல் ஊதியம் பெறுபவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் அகவிலைப்படியை 73 சதவீதத்திலிருந்து 78 சதவீதமாக உயர்த்தியும் (மேசையைத் தட்டும் ஒலி) வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்படி குறைந்தபட்ச அகவிலைப்படி உயர்வு 52 ரூபாயாகவும், அதிகபட்ச அகவிலைப்படி உயர்வு 285 ரூபாயாகவும் இருக்கும். இந்த அகவிலைப்படி உயர்வு அனைத்து அரசு அலுவலர்கள், உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் வழங்கப்படும். இதனால் சுமார் 10 லட்சம் அலுவலர்கள் பயன் பெறுவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு கூடுதலாக 99.64 கோடி ரூபாய் செலவாகும் என்பதையும், இந்த அகவிலைப்படி உயர்வு, 1994 ஜனவரி மாதம் முதல் தேதியிலிருந்து நிலுவைத் தொகையுடன் சேர்த்து ரொக்கமாக வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-55

அதே போன்று, மாநில அரசின் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்கள் அனைவருக்கும், மத்திய அரசு கொடுத்திருப்பது போல, மேலும் ஒரு அகவிலைப் படி தவணை, 1—1—1994 முதல் வழங்கப்படும், அதன் படி, 1,750 ரூபாய் வரை ஓய்வூதியம் பெறுபவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் 97 சதவீதம் அகவிலைப்படியை 104 சதவீதம் எனவும் (மேசையைத் தட்டும் ஒலி) 1,750 ரூபாயி லிருந்து 3,000, ரூபாய் ஓய்வூதியம் பெறுவர்களுக்குத் தற் போது வழங்கப்பட்டு வரும், 73 சதவீதம் அகவிலைப்படியை, 78 சதவீதம் எனவும், 3, 000 ரூபாய்க்கு மேல் ஓய்வூதியம் பெறுபவர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் 63 சத வீதம் அகவிலைப்படியை, 67 சதவீதம் எனவும் உயர்த்தி வழங்கப்படும். இதனால் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய் வூதியம் பெறுபவர்கள் மாதத்திற்கு, குறைந்த பட்சம் 26 ரூபாயும், அதிகபட்சம் 156 ரூபாயும் பணப் பயன் பெறுவார்கள்

இந்த அகவிலைப்படி உயர்வு, தற்போது மாநில அரசின் கீழ் அகவிலைப்படி பெறும் அனைத்து ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் பொருந்தும். ஓய் வூதியம் பெறுபவர்களைப் பொறுத்தவரை, அரசுக்கு ஆண் டொன்றுக்கு 15.35 கோடி ரூபாய் செலவாகும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் கிராம உதவியாளர்கள் தற்போது 5 சதவீதம் அகவிலைப்படியைப் பெற்றுக் கொண்டு வருகிறார்கள். இதனை 1—1—1994 முதல் 12 சதவீதமாக உயர்த்தி வழங்கப் படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கிராம உதவியாளர்களுக்கும் இதனால் மாதம் ஒன்றுக்கு கூடுதல் பணப்பயன் 52 ரூபாய் கிடைக்கும். அரசுக்கு ஆண்டு ஒனறுக்கு 1,94 கோடி ரூபாய் கூடுதல் செலவாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சம்பள விகிதங்களில் ஊதியம் பெறும் அலுவலர்களுக்கு அகவிலைப்படி உயர்த்தப்படும் எல்லா நேரங்களிலும், தொகுப்பூதியம் மற்றும் மதிப்பூதியம் பெறும் அலுவலர்களுக் குக் குறிப்பிட்ட அளவில் ஊதிய உயர்வு வழங்கப்படும் என நிதிநிலை அறிக்கையில் கோடிட்டுக் காட்டப்பட்ட கொள்கையின் அடிப்படையில், 1-1-1994 முதல் மதிப்பூதியம் 150 ரூபாயும் அதற்கு மேலும் பெறுபவர்களுக்கு மாதம் 20 ரூபாய் உயர்வும். 150 ரூபாய்க்குக் கீழ் பெறுபவர்களுக்கு மாதம் 10 ரூபாய் உயர்வும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மூன்று லட்சம் ஊழியர்கள் இந்த உயர் வினால் பயன் பெறுவார்கள். இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 4.44 கோடி ரூபாய் செலவாகும்.

1—1—1994 முதல் அகவிலைப்படியை உயர்த்தி அளிப்பதன் காரணமாகவும், மதிப்பூதியம் மற்றும் ஓய்வூதியம் உயர்த்தி வழங்குவதாலும் அரசுக்கு ஆண்டொன்றுக்கு மொத்த மாக 121.37 கோடி ரூபாய் செலவாகும் எனபதையும், இந்த நிதியாண்டில் மட்டும் 141.67 கோடி ரூபாய் செலவாகும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன், (மேசையைத் தட்டும் ஒலி)

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கைகளை அளித்தல் பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. மா. சுந்தரதாஸ் பொதுக் கணக்கு குழுவின் தலைவர்

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் சார்பாக குழுவின் நூற்று முப்பத்தொன்றாவது முதல் நூற்று நாற்பத்தி இரண்டாவது வரையிலான 12 அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே. முனிவெங்கடப்பன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக குழுவின் நூற்று தொண்ணூற்று இரண்டாவது முதல் இரு நூற்று பத்தொன்பதாவது வரையிலான 28 அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன்,

மேற்படி அறிக்கைகளில் 201 முதல் 219 வரையிலான 19 அறிக்கைகள் போதிய அவகாசமின்மையால் அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக படியெடுத்த பிரதிகள் அளிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகளின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

அச்சிட்டப் பிரதிகள் கிடைத்தவுடன், அவை பேரவை உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பி வைக்கப்பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் மேலும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதயதெய்வம் அவர்களின் ஆட்சி,